# மயிலாடுதுறை நகராட்சி

**2018–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15–ஆம் தேதி திங்கள் கிழமை காலை 11.30 மணிக்கு நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.**

முன்னிலை:– திரு. பி.கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ.,எம்.ஃபில்.,
தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையர்
மயிலாடுதுறை நகராட்சி

மயிலாடுதுறை
நாள்:11.10.2018

தனி அலுவலர் / ஆணையர்
மயிலாடுதுறை நகராட்சி

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>15.10.2018</td><td>1) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட துலாகட்டத்தில் ஐப்பசி மாதம் 2018–ம் ஆண்டிற்கு துலா உற்சவ விழவிற்கு பார்க் அவென்யூ சாலையின் தென்புறம் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தற்காலிக விழா கடைகள் 50 நாட்களுக்கு மட்டும் (11.11.2018) முதல் 30.12.2018 வரை) அமைத்துக் கொள்ளும் உரிமைக்கு 11.10.2018 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் கீழ்கண்டுள்ளவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.<br>
<table>
<tr><th>வ. எண்.</th><th>பெயர்/முகவரி</th><th>50 நாட்களுக்குரிய தற்காலிக விழா கடைகள் அமைத்து கொள்ளும் உரிமம்</th><th>சென்ற ஆண்டு கேள்வி</th><th>மூன்றாண்டு க்கு சராசரி</th></tr>
<tr><td>1</td><td>R. சற்குருநாதன்<br>25. வடக்குவீதி,<br>திருவிழந்தூர்,<br>மயிலாடுதுறை.</td><td>ரூ.272000/–</td><td>–</td><td>–</td></tr>
<tr><td>2</td><td>D. செந்தில்<br>25E.அண்ணாவீதி,<br>கூறைநாடு, மயிலாடுதுறை.</td><td>ரூ. 332007/–</td><td>326805/–</td><td>323468/–</td></tr>
</table>
<br>மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 2–ல் குறிப்பிட்டுள்ள D. செந்தில்25E.அண்ணாவீதி, கூறைநாடு, மயிலாடுதுறை. என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை சென்ற ஆண்டு ஒப்பந்தப்புள்ளி தொகையை விடவும் மூன்றாண்டு சராசரி தொகையை விட கூடுதலாக உள்ளதால் இதனை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.4277/2018/அ1.</td><td>தீர்மான எண்:404<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | **2)** மயிலாடுதுறை நகராட்சியால் மணக்குடி கிராமத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையம் அமைப்பதனை தடை செய்ய கோரி எஸ். விஜயகுமார் த/பெ.T.K. சீனிவாசன் 28/8, சின்னக்கண்ணாரத்தெரு, மயிலாடுதுறை என்பவரால் தலைமை செயலாளர், தமிழ்நாடு அரசு நகராட்சி ஆணையர் உள்ளிட்ட 11 பேர்களை பிரதிவாதியாக சேர்த்து வழக்கு எண். W.P.No.22803/2018 சென்னை உயர்நீதிமன்ற வழக்கு தொடரப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் நகராட்சி ஆணையரின் சார்பாக திரு.பி. ஸ்ரீநிவாஸ், வழக்கறிஞர், சென்னை அவர்கள் வாதாடவும், அதற்குரிய செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மேற்படி வழக்கு எண். W.P.No.22803/2018 நகராட்சி சார்பாக திரு.பி. ஸ்ரீநிவாஸ், வழக்கறிஞர், சென்னை அவர்கள் ஆஜராகவும், அதற்குரிய செலவினத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண். 12013 /2018/எப்1. | **தீர்மான எண்:405**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **3)** மயிலாடுதுறை நகராட்சியில் பொதுமக்கள் மற்றும் நகராட்சி படவரைவாளர்கள் மூலம் பெறப்படும் கட்டிட விண்ணப்பங்களுக்கு கூராய்வு கட்டணமாக ரூ.100/– வசூலிக்கப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக ந.க.எண்.226607/2018/டிபி4. நாள்.25.09.2018–ந்தேதிய உத்தரவில் கட்டிட விண்ணப்பங்களை பொதுமக்கள் மற்றும் படவரைவாளர்கள் நேரடியாக ஆன்லைனில் விண்ணப்பிக்கவும் அதற்கான கூராய்வு கட்டணமாக ரூ.500/– 15.10.2018–ந்தேதி முதல் வசூல் செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நகராட்சியில் நேரடி இணையதள சேவையை அமுல்படுத்தவும், கூராய்வு கட்டணமாக ரூ.500/– வசூல் செய்யவும் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 15.10.2018 முதல் கட்டிட விண்ணப்பங்களை நேரடி இணையதள சேவையில் அமுல்படுத்தவும், கூராய்வு கட்டணம் ரூ.100/–ஐ மாறுதல் செய்து ரூ.500/– வசூல் செய்யவும் அவசரம் அவசியம் கருதி மன்றத்தின் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.4538/2018/எப்1. | **தீர்மான எண்:406**<br>அனுமதிக்கப்பட்டது |

4) தமிழக அரசின் அரசாணை (பல்வகை) எண்.78 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் (M.A) துறை, நாள்:26.07.2018 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகிள் சட்டம் 1920 அட்டவனை 4ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள் அதிகாரங்களின்கீழ் மயிலாடுதுறை நகராட்சி சொத்து வரியினை 01.04.2018 முதல் மாற்றியமைக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீடு/சொத்து உரிமையாளர்/குடியிருப்போர்/குத்தகைதாரர் சமர்பிக்கும் அறிக்கையில் உள்ள விபரங்களை அடிப்படையாக கொண்டு இருக்கும்.

மயிலாடுதுறைநகராட்சி பகுதிகளில் உள்ள உரிமையாளர்கள்/குடியிருப்போர்/குத்தகைதாரர் அவர்கள் வசம் உள்ள சொத்துகள் பற்றிய விபரங்கள் அடங்கிய சொத்து விபர அறிக்கைகளை 24.11.2018க்கு முன்னதாக இவ்வலுவலகத்திற்கு வந்து சேருமாறு சமர்பிக்கும்படி சொத்து உரிமையாளர்கள்/குடியிருப்போர்/குத்தகைதாரர்களை கேட்டுக்கொள்ளப்பட்டும் சுயமதிப்பீட்டு அறிக்கை படிவங்களை இந்நகராட்சி அலுவலலகத்திலோ அல்லது நகராட்சி இணையதளத்தின் மூலமாக பதிவேற்றம் செய்து கொள்ளலாம் எனவும் சுய மதிப்பீட்டு படிவங்களை குறிப்பிட்டக்காலத்திற்குள் சமர்பிக்க தவறினால் நகராட்சியே தன்னிச்சையாக சொத்து மதிப்பீட்டை திருத்தியமைக்கும் எனவும் மண்டல மதிப்பு மறு மதிப்பீடு செய்யப்பட்டு தினசரி நாளிதழில் வெளியீடு செய்யப்பட்ட 30 நாட்களுக்குள் எழுத்து பூர்வமாகவோ அல்லது தபால் மூலமாகவோ ஆணையர், மயிலாடுதுறை நகராட்சி என்ற முகவரியில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டு 10.09.2018–ஆம் தேதிய தினமணி நாளிதழில் சொத்துவரி திருத்த அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டது.

ஆனால் அறிவிப்பு பிரசுரம் செய்யப்பட்டு 30 தினங்கள் கடந்த நிலையில் ஆட்சேபணை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வரபெறவில்லை. எனவே 07.09.2018–ஆம் தேதிய நகர்மன்ற தீர்மான எண்.390–.ன்படி நிர்ணயிக்கப்பட்ட மண்டல மதிப்பை உறுதி செய்து மன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டப்படுகிறது.

| மண்டலம் | ஒரு சதுரடிக்கு உயர்த்தப்படும் அடிப்படை மதிப்பு | | |
|---|---|---|---|
| மண்டலம் | மண்டலம் –I (A Zone) ரூ. | மண்டலம் –II (B Zone) ரூ. | மண்டலம் –III (C Zone) ரூ. |
| குடியிருப்பு கட்டிடங்கள் | 1.80 | 1.50 | 0.90 |
| தொழிற்சாலை கட்டிடங்கள் | குடியிருப்பு கட்டிடங்களுக்கான அடிப்படை மதிப்பிலிருந்து இரண்டு மடங்கு | | |
| வணிக கட்டிடங்கள் | குடியிருப்பு கட்டிடங்களுக்கான அடிப்படை மதிப்பிலிருந்து மூன்று மடங்கு | | |

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.3410/2018/அ1**

**தீர்மான எண்:407**

அனுமதிக்கப்பட்டது

| | | |
|---|---|---|
| | 5) மயிலாடுதுறை நகராட்சிக்குட்பட்ட நகரப்பகுதியில் ஆண்டுதோறும் நடைபெறும் அறிவிக்கப்பட்ட திருவிழாவான துலா உற்சவ விழா 18.10.2018 முதல் 17.11.2018 வரை நடைபெறுவதை முன்னிட்டு பொது சுகாதார பணிகளுக்கு தேவையான தளவாடப்பொருட்கள், கிரிமி நாசினிகள், பிளிச்சிங் பவுடர், நீர்த்த சுண்ணாம்பு மற்றும் மருத்துவ முகாம்களுக்கு தேவையான நோய்தடுப்பு மருந்துப்பொருட்கள் 2018–2019–ம் ஆண்டிற்கு வாங்கிட உத்தேச செலவினம் ரூ. 11,00,000/– (ரூபாய் பதினொரு லட்சத்திற்கு) நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.4191/2018/எச்2. | **தீர்மான எண்:408**<br><br>அனுமதிக்கப்பட்டது |
| | 6) மயிலாடுதுறை நகராட்சியின் நகரப்பகுதியில் எதிர்வரும் 18.10.2018 முதல் 17.11.2018 வரை நடைபெறவுள்ள அறிவிக்கப்பட்ட விழாவான துலா உற்சவம் திருவிழாவினை முன்னிட்டு பொது சுகாதாரப்பிரிவுகளுக்கு தேவையான தூய்மை பணிகளுக்கான கிருமிநாசினி பொருட்கள், பிளிச்சீங் பவுடம், நீர்த்த சுண்ணாம்பு மற்றும் தளவாட பொருட்கள் விநியோகம் செய்திட அரசு நிறுவனமான TANSIDCO, தஞ்சாவூர் என்ற நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மருத்துவ முகாம்களுக்கு தேவையான நோய் தடுப்பு மருந்து பொருட்களை விநியோகம் செய்ய MCCWS, மயிலாடுதுறை என்ற நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: பொது சுகாதாரப்பணியாளர்களின் அவரது அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி வழங்கலாம்.<br><br>ந.க.எண்.4191/2018/எச்2. | **தீர்மான எண்:409**<br><br>அனுமதிக்கப்பட்டது |
| | 7) மயிலாடுதுறை நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் தகுதியுடைய பணியாளர்களுக்கு 2018–2019 ஆண்டிற்கு சீருடைகள் வாங்கவும் மற்றும் பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்களுக்கு மட்டும் காலணிகள் வாங்கவும் உத்தேச செலவினம் ரூ.500000/– (ஐந்து லட்சம் மட்டும்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.3527/2018/எச்1. | **தீர்மான எண்:410**<br><br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **8)** இந்நகராட்சி Online வசதியில் ஒப்பந்தப்புள்ளிகளை பதிவு ஏற்றம் செய்திட ஏதுவாக Digital signature certificate Renewal புதியதாக வாங்க வேண்டி உள்ளதால் பொறியியல் பிரிவில் பணிப்புரியும் பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர்கள் ஆகியவர்களுக்கு Digital signature certificate வாங்கிட தேவையான உத்தேச செலவினத்தொகை (விலைப்புள்ளி) ரூ.7800/– (எழாயிரத்து எழுனூறு மட்டும்) ஆகும் இதனை பொதுநிதியில் இருந்து செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்ப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம். | **தீர்மான எண்:411**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **9)** மயிலாடுதுறை நகராட்சி வார்டு எண்.8–ல் அமைந்துள்ள துலா கட்டத்தில் 7,8,9–10–2018 ஆகிய தேதிகளில் மூன்று தினங்கள் அந்திம புஷ்கர விழா நடைபெறுவதால் மயிலாடுதுறை கூட்ட மன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி ஆணையர் அவர்களின் அறிவுறுத்தலின் படி துலா கட்டத்தினை சுற்றி Electrical Arrangement (Hairtnsis) முறையில் செய்திட தேவையான மதிப்பீட்டு தொகை ரூ.76000/– (ரூபாய் எழுபத்தி ஆறாயிரம் மட்டும்) ஆகும். எனவே மேற்படி பணியினை மேற்கொள்ளவும், இதற்கு ஆகும் செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்த மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.4795/2018/இ1. | **தீர்மான எண்:412**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **10)** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுரையின்படி மயிலாடுதுறை நகராட்சி பகுதிகளில் Automatic Vending Centre அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் குடிநீர் சுத்திகரிப்பு நிலைய அமைத்து பயனாளிகளுக்கு Smart Card வழங்கி 20 லிட்டருக்கு ரூ.7/– வீதம் வழங்க இதன் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே நகராட்சியில் ஐந்து (5) இடங்களில் இத்திட்டதினை DBFOT முறையில் 10 ஆண்டுகள் பணி செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1) அனுமதிக்கலாம்<br>2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி Expression of Interest (EOI) கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3) மேலும் Expression of Interest (EOI) – அறிவிப்பினை மாநில அளவில் இரு தினசரிகளில் பிரசுரம் செய்ய செய்தி மற்றும் மக்கள் தொடர்பு துறை, தலைமைச் செயலகம் , சென்னை – 9. அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்: 4377 /2018/இ1 | **தீர்மான எண்:413**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **11)** மயிலாடுதுறை நகராட்சி பாதாள சாக்கடை திட்டம் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி தனியார் வசம் மேற்கொள்ளும் பணிக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி செய்திட தேவையான மதிப்பீடு தொகை ரூ.331.79/–(ரூபாய் முன்னூற்றி முப்பத்தி ஒரு இலட்சம் மற்றும் எழுபத்தி ஒன்பாதாயிரம் மட்டும்) இந்நகர் மன்ற தீர்மான எண் 369 நாள் : 20.07.2018 மூலம் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது இப்பணிக்கான திருத்திய மதிப்பீடு முதலாம் ஆண்டு ரூ.109.50/– (ரூபாய் நூற்றி ஒன்பது இலட்சத்தி ஐம்பதாயிரம் மட்டும்) இரண்டாம் ஆண்டிற்கு ரூ.114.97/– (ரூபாய் நூற்றி பதினான்கு இலட்சத்தி தொண்ஷாற்று ஏழாயிரம் மட்டும்) மற்றும் மூன்றாம் ஆண்டிற்கு ரூ.120.71/– (ரூபாய் நூற்றி இருபது இலட்சத்தி எழுபத்தி ஒராயிரம் மட்டும்) தொகை ஆக கூடுதல் ரூ.345.18/– (ரூபாய் முன்னூற்றி நாற்பத்தி ஐந்து இலட்சத்தி பதினெட்டாயிரம் மட்டும் ) ஆகும். எனவே இத்தொகை இந்நகராட்சியின் பாதாளச் சாக்கடை திட்ட நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br><br>ந.க.எண்: 3993/2018/இ1 | **தீர்மான எண்:414**<br><br>அனுமதிக்கப்பட்டது |
| | 12) மயிலாடுதுறை நகரத்திற்கு பெருமை சேர்க்கும் வரலாற்று சிறப்புமிக்க “துலா உற்சவம் திருவிழா 2018” ஐப்பசி மாதம் 1 ஆம் தேதி முதல் கார்த்திகை மாதம் 1 ஆம் தேதி வரை நடைபெறும். இத்திருவிழா காலகட்டத்தில் காவேரியில் புனித நீராடுவதற்கு அனைத்து பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் புனித வருகை தருவார்கள். எனவே பொதுமக்களுக்கும் பக்தர்களுக்கும் சுகாதார அடிப்படை வசதிகளான தற்காலிக சிறுநீர் கழிப்பிடம், பெண்களுக்கான உடைமாற்றும் அறை மற்றும் மருத்துவ முகாம் பந்தல் அமைக்கவும் தேவையான உத்தேச மதிப்பீடு தொகை ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொண்டிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியத்தை கருதி ஒப்பந்தம் கோரி, பணி உத்தரவு வழங்கி பணி செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்: 12064/2018/இ1 | **தீர்மான எண்:415**<br><br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **13)** மயிலாடுதுறை நகரத்திற்கு பெருமை சேர்க்கும் வரலாற்று சிறப்புமிக்க "துலா உற்சவம் திருவிழாவினை முன்னிட்டு தேர் செல்லும் பாதை மற்றும் பொதுமக்கள் செல்லும் சாலைகளான நான்கு வீதி அருள்மிகு மயூரநாதர் திருகோவில், வடக்கு மற்றும் மேற்கு வீதி அருள்மிகு பரிமளரெங்கநாதர் கோவில் , பட்டமங்கல தெரு, மகாதான தெரு, மார்கெட் தெரு ஆகிய சாலைகளில் உள்ள குண்டு குழிகளால் பழுதான சாலைகளை செப்பனிட்டு பணிகள் மேற்கொள்ள தேவையான மதிப்பீடு தொகை ரூ.1,00,000/— (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) இதனை நகராட்சியின் பொதுநிதியிலிருந்து மேற்கொண்டிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியத்தை கருதி ஒப்பந்தம் கோரி, பணி உத்தரவு வழங்கி பணி செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்: 12064/2018/இ1 | **தீர்மான எண்:416**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **14)** தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் மயிலாடுதுறை நகராட்சியில் உள்ள 36 வார்டுகளில் கழிவறை இல்லாத வீடுகள் கணக்கெடுக்கப்பட்டு பயனாளிகளுக்கு அரசு மான்யதொகை ரூ.8000/— வழங்கிட தெரிவிக்கப்பட்ட அரசாணைக்கிணங்க, மத்திய அரசு வழங்கும் பங்குதொகை ரூ.4000/— மாநில அரசு வழங்கும் பங்குதொகை ரூ.2000/— மற்றும், இந்நகராட்சியில் வழங்கும் பங்குதொகை ரூ.2000/— வீதம் கூடுதல் தொகை ரூ. 8000/— வீதம் இதுவரை கழிவறை கட்டி முடிக்கப்பட்ட பயனாளிகளுக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது. 2018—2019 ஆம் ஆண்டிற்கான மறுகணக்கெடுப்பு அலகுகளில் கட்டி முடிக்கப்பட்ட பயனாளிகள் 327 நபர்களுக்கு தனித்தனியாக தொகை ரூ. 8000/— வீதம் வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.4232/2016/எச்1. | **தீர்மான எண்:417**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **15)** மயிலாடுதுறை நகராட்சியின் அனைத்து வெளிப்புற பணியாளர்களும் எதிர்வரும் வடகிழக்கு பருவமழை காலங்களில் பொது சுகாதாரபணிகள், மழை வெள்ள பாதுகாப்பு மீட்புபணிகள், குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மற்றும் மழைநீர் வடிகால் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ள மழை அங்கிகள் (Rain coat) 190 எண்ணிக்கைகள் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.300000/– (மூன்று லட்சம் மட்டும்)–திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**ந.க.எண்.** 4001/2018/எச்1 | **தீர்மான எண்:418**<br>அனுமதிக்கப்பட்டது |
| | **16)** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018–19–ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிக்கால் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34, அறிவிப்பு எண்.14ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கு குடிநீர் மையங்கள் (Automatic vending center) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.<br><br>என்பதிற்கிணங்க, மயிலாடுதுறை நகராட்சியில் உள்ள 36 வார்டுகளிலும் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ ஏற்படும் செலவினத் தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) வீதம் மொத்தம் 36 வார்டுகளில் ரூ. 648.00 இலட்சம் (ரூபாய். அறுநூற்றி நாற்பத்தி எட்டு இலட்சம்) ஆகும்.<br><br>இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.<br><br>எனவே, நகரில் உள்ளஅனைத்து வார்டுகளிலும், வார்டுக்கு 1 வீதம் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்கள் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்பநுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து கீழ்க்கண்ட வார்டுகளிலும் செயல்படுத்தவும், இதற்கான அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | **தீர்மான எண்:419**<br>அனுமதிக்கப்பட்டது |

| வ.எண் | வார்டு எண் | சுத்திகரிப்புநிலையம் அமைக்கதேர்ந்தெடுக்கப்பட்டஇடம் |
|---|---|---|
| 1 | 1 | அண்ணா நகர் |
| 2 | 2 | தோப்பு தெரு 2nd cross |
| 3 | 3 | மேல ஆராயத் தெரு |
| 4 | 4 | வள்ளலார் கோவில் மேல வீதி |
| 5 | 5 | ஆனதாண்டவபுரம் ரோடு |
| 6 | 6 | துர்க்கையம்மன் கோவில் தெரு |
| 7 | 7 | தர்மபுரம் ரோடு |
| 8 | 8 | மகாதானத் தெரு |
| 9 | 9 | பழைய பேருந்து நிலையம் |
| 10 | 10 | எம்.ஜி.ஆர் காலனி |
| 11 | 11 | பெரிய எரகலி தெரு |
| 12 | 12 | அய்யனார் கோவில் தெரு |
| 13 | 13 | அண்ணா வீதி |
| 14 | 14 | கள்ளக்குறிச்சி மாரியம்மன் கோவில் தெரு |
| 15 | 15 | வியாபாரிகள் தெரு |
| 16 | 16 | கரிமேட்டுத்தெரு |
| 17 | 17 | சாரத்தட்டை தெரு |
| 18 | 18 | ஆலந்துரையப்பர் சன்னதி தெரு |
| 19 | 19 | ஆரோக்கியநாதபுரம் |
| 20 | 20 | தூக்கணாங்குளம் கீழ்கரை |

| | | |
|---|---|---|
| 21 | 21 | 63வர் பேட்டை தெற்கு தெரு |
| 22 | 22 | சின்ன எரகலி தெரு |
| 23 | 23 | தோப்பு தெரு |
| 24 | 24 | பஞ்சுக்கார செட்டித்தெரு |
| 25 | 25 | கலைஞர் காலனி |
| 26 | 26 | மீன்மார்கெட் ரோடு |
| 27 | 27 | புதிய பேருந்து நிலையம் |
| 28 | 28 | நம்பர்.1 ரோடு (கண்கொடுத்த பிள்ளையார் கோவில் தெரு) |
| 29 | 29 | வரதாச்சாரியார் காலனி |
| 30 | 30 | அய்யாரப்பர் தெற்கு வீதி |
| 31 | 31 | பெசன்ட் நகர் |
| 32 | 32 | மயூரநாதர் கீழ வீதி |
| 33 | 33 | பெரிய மாரியம்ம கோவில் தெரு |
| 34 | 34 | கொத்ததெரு |
| 35 | 35 | நம்பர்.5 புதுத் தெரு |
| 36 | 36 | மாந்தோப்பு தெரு |

அலுவலககுறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 4377/2018/இ1

**17)** மயிலாடுதுறை நகராட்சிக்கு சொந்தமான 36 வார்டுகளிலும் வரிவசூல் மேற்கொள்ளும் பணிக்காக கீழ்கண்டுள்ள விபரப்படியான பணிகளுக்கு விலைப்புள்ளியினை 05.09.2018–ந்தேதி கீழ்கண்டுள்ள விபரப்படி விலைப்புள்ளிகள் வரப்பட்டுள்ளது.

**தீர்மான எண்:420**

அனுமதிக்கப்பட்டது

**<u>பணியின் விபரம்</u>**

| வ. எண் | பணியின் விபரம் | ஜெமினி பிரஸ், ரயிலடி, மயிலாடுதுறை | கலைஞர் அச்சகம், 38/22, கச்சேரிரோடு, மயிலாடுதுறை. | நாதன் அச்சகம் 64, கச்சேரி ரோடு, மயிலாடுதுறை. |
|---|---|---|---|---|
| 1 | A4 சைஸ் பேப்பர் பிரிண்டவுட் ஒரு பக்கத்திற்கு | ரூ.2.60/– | ரூ.2.50 | ரூ.2/– |
| 2 | F/S சைஸ் பேப்பர் பிரிண்டவுட் ஒரு பக்கத்திற்கு | ரூ.3.00/– | ரூ.3.00/– | ரூ.2.50/– |
| 3 | A4 சைஸ் பேப்பர் ரேப்பர் பைண்டிங் ஒரு புத்தகத்திற்கு | ரூ.65/– | ரூ.60/– | ரூ.50/– |
| 4 | F/S சைஸ் ரேப்பர் பைண்டிங் ஒரு புத்தகத்திற்கு | ரூ.75/– | ரூ.70/– | ரூ.60/– |
| 5 | ஏல ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் இதர ஆவணங்கள் (A4 சைஸ் பேப்பர் பிரிண்டவுட் ஒரு பக்கத்திற்கு) | ரூ.1.50 | ரூ.1.25 | ரூ.1/– |
| 6 | பேருந்து கட்டண கழிப்பிடம் ரசீது புத்தகம் (ஒரு புத்தகம் 100 எண்ணிக்கை ரசீது கொண்டது) | ரூ.40/– | ரூ.38/– | ரூ.30/– |

வரப்பட்டுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி தந்துள்ள நாதன் அச்சகம், மயிலாடுதுை என்ற விலைப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்ப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2672/2018/அ1.

| | | |
|---|---|---|
| | 18) மயிலாடுதுறை நகராட்சியில் பாதுகாப்பான குடிநீர் பொது மக்களுக்கு வழங்கிட ஏதுவாக 1.வரதாச்சாரியார் பூங்கா 2. மாமரத்து மேடை 3. கே.கே.ஆர். நகர் ஆகிய மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் குளோரினேசன் அமைப்பு அமைப்பதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.5.25 லட்சம் ஆகும் மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சி சட்ட விதி எண்.15–ன்கீழ் இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொண்டதையும் மன்றத்தின் பின்னேற்புக்கு வைக்கப்படுகிறது.<br><br>அலுவலக குறிப்பு: 1. பின்னேற்பு வழங்கலாம்.<br>2. இப்பணியினை அவசர அவசியம் கருதி ந.ச.உ.எண். 15–ன்படி Tamilnadu chemicals interstices மூலம் பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br><br>ந.க.எண்.5555/2017/இ1. | **தீர்மான எண்:421**<br><br>அனுமதிக்கப்பட்டது |